**செ.வெ.எண் :724** **நாள்: 08.11.2021**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சர் சட்டமன்ற அறிவிப்பு, நாள்.31.08.2021-ன்படி கிராம அளவிலான பட்டா பதிவுகளில் உரிய மாறுதல் கோரிக்கைகள் அரசாணை (நிலை) எண். 644 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம் பிரிவு (SS-II(2)), நாள். 11.10.2021-ன்படியும், நகர அளவிலான பட்டா பதிவுகளில் உரிய மாறுதல்கள் செய்ய அரசாணை (நிலை) எண். 612 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நகர நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டம் பிரிவு (SS-II(2)), நாள். 01.10.2021-ன்படியும், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வருவாய் கிராமங்களில் பட்டா கணினிமயமாக்கப்பட்ட ஆன்லைன் "தமிழ்நிலம்" மென்பொருளில் உள்ள பதிவுகளில் உள்ள எளிய பிழைகளை திருத்துதல் தொடர்பாக 10.11.2021 முதல் 31.12.2021 வரை உள்ள ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

இச்சிறப்பு முகாமில், தமிழ்நிலம் மென்பொருளில் உள்ள கீழ்க்கண்ட இனங்கள் தொடர்பாக மனுக்கள் அளிக்கலாம்.

1) புலஎண்கள் மற்றும் உட்பிரிவு எண்கள் தவறாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள இனங்கள்
2) பரப்பு தவறாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட இனங்கள்.
3) பட்டாதாரர் பெயர், தந்தை / பாதுகாவலர் பெயர் ஆகியவற்றில் தவறாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட இனங்கள்.
4) உறவுமுறை தவறாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட இனங்கள்.
5) காலியாக உள்ள கலங்களில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுதல் பட்டாவில் உரிமையுடைய நிலஉரிமையாளர்களுக்கு பதிலாக அருகில் உள்ள நில உரிமையாளர்களின் பெயரினை பட்டாவில் தவறாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள இனங்கள்.

மேற்குறித்த இனங்கள் குறித்து மனுக்களை பொதுமக்கள் தங்களது பகுதியில் தங்களது கிராமத்திற்காக குறிப்பிட்ட நாளில் நடைபெறும் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு மனுக்களை கொடுத்து "தமிழ்நிலம்" மென்பொருளில் உள்ள எளிய பிழைகளை திருத்தம் செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மேற்கண்ட தகவல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.**

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**